பக்கங்கள் ஆறு

யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 28 வியாழக்கிழமை (14 10 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 320

# முன்னேறி தாக்கிவிட்டு வாபஸாகும் ராணுவ நடவடிக்கையே இனிமேல்!

## அனுராவின் ராஜினாமா ஸ்ரீ.ல.சு.க. ஏற்றது!

### ஒரு மாதத்தில் எம்.பி.பதவியிழப்பார்

கொழும்பு, ஒக். 14

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகுவதாகத் தெரிவித்த கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்கா அனுப்பிய இராஜினாமாக் கடிதத்தை கட்சியின் தலைமைப்பீடம் ஏற்றிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து ஸ்ரீ.ல.சு.க.வுக்கும் அனுராவுக்கும் உள்ள தொடர்பு அற்றுப் போய்விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

கட்சியின் உறுப்புரிமையை விட்டு அனுரா பண்டாரநாயக்கா விலகுவதுடன், ஒரு மாத காலத்தில் அவரது எம்.பி. பதவியும் பறிபோகும்.

அவரின் இடத்துக்கு புதிய எம்.பி. ஒருவரை சு.க. நியமிக்கும்.

அனுராவின் இராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாக அவருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று கட்சியின் பொது செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார். (உ-6)

## சந்திரிக்காவின் கை ஓங்கியது

கொழும்பு, ஒக். 14

அனுராவின் ராஜினாமாவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப்பீடம் ஏற்றுக்கொண்டதை அடுத்து சுதந்திரக் கட்சிக்குள் சந்திரிக்காவின் பலம் அதிகரித்திருப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன!

அனுராவின் ராஜினாமா கட்சிக்குக் கிடைத்த பெரிய வெற்றி என்று அனுராவின் எதிரிகளும் சந்திரிக்காவின் ஆதரவாளர்களும் கருதுவதாக பி.பி.ஸி சிங்களச் சேவையில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொள்ளுப்பிட்டியில் ரூ.15 லட்சம் கொள்ளை

### துப்பாக்கிகளும் அபகரிப்பு

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் வங்கி ஒன்றுக்குச் செலுத்தப்படுவதற்காக எடுத்து வரப்பட்ட 15 லட்சம் ரூபா பணம் துப்பாக்கி முனையில் கொள்ளையிடப்பட்டது. அந்தப் பணத்துக்குக் காவலாக வந்த பாதுகாவலர்களிடமிருந்து இரண்டு துப்பாக்கிகளும் கொள்ளையர்களால் அபகரித்துச் செல்லப்பட்டது.

நேற்று முன்தினம் காலையில் தனியார் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான பணம் வங்கியில் வைப்பிடப்படுவதற்கு எடுத்து வரப்பட்டபோதே கொள்ளையிடப்பட்டது. (உ-9)

### ப.நோ.கூ. சவில்

## மண்ணெண்ணெய் அளவு குறைத்து விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 14

தற்போது பங்கீட்டு அடிப்படையில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் ஊடாகப் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வரும் மண்ணெண்ணெயின் அளவில் மோசடி செய்யப்பட்டுவருவது திடீர் பரிசோதனைகள் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளில் நடத்தப்பட்ட இத் திடீர் பரிசோதனைகளின் போதே இந்த மோசடி அம்பலத்துக்கு வந்தது.

பொதுமக்களிடமிருந்து கிடைத்த முறையீடுகளை அடுத்து யாழ் மாவட்ட நிறுவைகள், அளவைகள் பொறுப்பதிகாரி திரு. கா. நாகலிங்கம், நிறுவைகள், அளவைகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### 'யாழ்தேவி' நடவடிக்கை:

## இராணுவத் தளபதியின் உதவியாளரும் மரணம்

கொழும்பு, ஒக். 14

இராணுவத் தளபதியின் நேரடி உதவியாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருந்த கப்டன் நாணயக்காரவும் யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் உயிரிழந்த படையினரில் ஒருவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இராணுவ நடவடிக்கையின் பின்னர் அவர் புதிய பதவியை ஏற்கவிருந்தார்.

## 'யாழ்தேவி' தோல்வியை அடுத்து படையினர் முடிவு?

கொழும்பு, ஒக்டோபர் 14

"யாழ்தேவி" இராணுவ நடவடிக்கையின் போது அடைந்த தோல்வியை அடுத்து, இனிமேல் நிலைகொண்டுள்ள பிரதேசங்களிலிருந்து முன்னேறி புலிகளைத் தாக்கி விட்டு வாபஸாகும் இராணுவ நடவடிக்கைகளிலேயே படையினர் ஈடுபடத் தீர்மானித்திருக்கின்றனர்.

கொழும்பு செய்தி வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றன.

அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாவது:- 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட இளாவிலை, இரா

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஆளும் ஐ.தே.கவுடன் கருத்து வேறுபாடு:

## வடமேல் மாகாண ஆளுநர் நேற்று திடீரென ராஜினாமா!

கொழும்பு, ஒக். 14

வடமேல் மாகாண ஆளுநர் மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரம தமது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார்.

மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரம தனிப்பட்ட காரணங்களுக்காக தனது பதவியில் இருந்து ராஜினாமாச் செய்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது ராஜினாமாவை அடுத்து திரு. கருணசேன கொடித்துவக்கு வடமேல் மாகாண ஆளுநராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

களனி பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரான கருணசேன கொடித்துவக்கு ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகளில் இலங்கையின் தூதுவராகவும் கடமையாற்றி உள்ளார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த ஜி.எம். பிரேமச்சந்திர சமீபத்தில் வடமேல் மாகாண முதலமைச்சராக மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரமவினால் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்ட விதம் ஐ.தே.கவுக்குள் பெரும் அதிருப்தியைக் கிளப்பி விட்டிருந்தது என்றும் —

அதன் எதிரொலியே அவரது ராஜினாமா என்றும் நம்பப்படுகிறது.

தென்மாகாண சபைக்கும் வடமேல் மாகாண சபைக்கும் ஐ.தே.கவைச் சேர்ந்தவர்களை முதலமைச்சர்களாக நியமித்தது சட்ட விரோதமானது என்று மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருந்ததும் —

தீர்ப்பு வழங்கப்பட்ட மறு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாக்கீருக்கும் நெருக்கடி: ராஜினாமா செய்வாரா?

நேற்று முன்தினம் காலியில் முதலமைச்சர் பதவிப்பிரமாண வைபவத்தை அடுத்து இடம் பெற்ற குழப்பங்கள் —

நேற்று வடமேல் மாகாண சபை ஆளுநர் மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரமாவின் ராஜினாமா — ஆகியவற்றால் தென் மாகாண சபை ஆளுநர் அல்ஹாஜ் பாக்கீர் மார்க்காரும் இக்கட்டான நிலைக்குள் தள்ளப்படுவார் என்று பி.பி.ஸி. தெரிவித்தது.

பாக்கீர் மார்க்காரின் ராஜினாமாவும் இடம் பெறலாம் என்று ஊகங்கள் தெரிவிக்கப்படுவதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (இ 6)

### தமிழக மீனவர் பலியான சம்பவம்:

## இந்தியத் தரப்பைச் சமாளிக்க ஹமீத் தூதரைச் சந்தித்தார்

கொழும்பு, ஒக். 14

கச்சதீவுக் கடலில் நான்கு தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கடந்த வாரம் சுட்டுக் கொன்றது தொடர்பாக இந்திய அரசு செய்த முறைப்பாடு குறித்து வெளியுறவு அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத், கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் நரேஷ்வர் தயாளுடன் நேற்று பேச்சு நடத்தினார்.

வெளியுறவுச் செயலாளர் பேர்ணட் திலகரத்ன, பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஹமில்டன் வனசிங்க, கடற்படைத் தளபதி மொஹான் சமரசேகர ஆகியோரும் இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

இந்திய மீனவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் பற்றி உடனடியாக விசாரணை நடத்தும்படி தாம் உத்தரவிட்டிருப்பதாகக் கூறிய அமைச்சர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### அவ்ரோ நேட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 14

அவ்ரோ விமானம் ஒன்று நேற்றுக்காலை குடாநாட்டின் பல பகுதிகளிலும் வழமையை விடமிகவும் தாழ்வாகப் பறந்தது.

யாழ். நகரப்பகுதி உட்பட பல பகுதிகளில் இந்த விமானம் வட்டமிட்டதையும் காணக்கூடியதாக இருந்தது. (இ-178-168-15 17)

### வீரச்சாவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற தவறுதலான விபத்துச் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளான இரண்டாம் லெப்டினன்ட் கார்த்திக் அல்லது நிரு (தர்மகுலசிங்கம் பிரதீபன் - மாசார், பளை), இரண்டாம் லெப்டினன்ட் கலைவாணன் அல்லது நேரு (மகேந்திரராசா லோகேஸ்வரன் - கப்பூது, கரவெட்டி) ஆகியோர் வீரச்சாவடைந்தனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவாலை, மாதகலுக்கு செஞ். குழுவினர் செல்வர்

இளவாலை, மாதகல் பகுதிகளுக்கு அடுத்த வாரம், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் செல்லவிருக்கின்றனர்.

இராணுவப் பிடியில் சிக்கியிருக்கும் சுமார் 300 பேரின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டே இக்குழுவினர் அங்கு செல்கின்றனர்.

பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களையும் செஞ்சிலுவை குழுவினர் சந்திப்பர். (ஓ-8)

# ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் இலச்சினை மாற்றப்படும்

கொழும்பு, ஒக். 14

ஸ்ரீலங்காக் குடியரசு ஜனாதிபதியின் இலச்சினை மாற்றப்படவுள்ளது.

புதிய இலச்சினையின் மாதிரி வடிவத்தை ஜனாதிபதி விஜேதுங்கா நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்து வைக்கும்போது ஜனாதிபதியின் புதிய இலச்சினை உத்தியோக பூர்வமாக அறிமுகப்படுத்தப்படும் என்று சண்டே ஐலண்ட் தகவல் வெளியிட்டுள்ளது.


வட்டு - கிழக்கு

## துறட்டி பனை ஸ்ரீமுத்துமாரி அம்பாள்

## தேவஸ்தான சண்டிகா ஹோமம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் ஸ்ரீமுக வருடம் புரட்டாதி மாதம் 29ஆம் நாள் 15 - 10 - 1993 வெள்ளிக்கிழமை தொடக்கம் 16-10-1993 சனிக்கிழமை வரை சண்டிகா ஹோமம் எனும் மகாயாகம் நடைபெறும்.

இந்த யாகம் ஆறாவது முறையாக தொடர்ந்து நடைபெறுவதால் இவ்வருடமும் மிகவும் சிறப்பாக நடைபெறும்.

அடியார்கள் அனைவரும் இன, மத, பேதம் இன்றி உபயமாக அல்லாத இயன்ற அளவு உதவிகள் புரிந்தும் இவ்யாகம் சரண இப்பிறவி கிடைத்ததே என்று எண்ணி எல்லா மக்களும் துன்பங்கள் நீங்கி பெருவாழ்வு வாழ வேண்டும் என்று பிரார்த்திக்கும் வண்ணம் வேண்டுக் கொள்கிறோம்.

● உதவிகள் உபயங்கள் செய்வோர் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இங்ஙனம்,
தேவஸ்தான பாதுகாவலர்.

(27642)



## முக்கிய வேண்டுகோள்

யாழ். மாவட்டத்திலுள்ள உத்தரவு பெற்ற வியாபாரிகளுக்கான கலந்துரையாடல்

இடம்: யா/செங்குந்தா இந்துக்கல்லூரி, கல்வியங்காடு

காலம்: 16 — 10 — 1993 சனிக்கிழமை காலை 9மணி

சகல உத்தரவு பெற்ற வியாபாரிகளையும் (A. D.) கலந்து கொள்ளும் வண்ணம் வேண்டுகிறோம்.

நன்றி.

இங்ஙனம்,
உத்தரவு பெற்ற வியாபாரிகள் சங்கம்,
(நல்லூர் பிரதேசம்).

(27638)



அரசாங்க கேள்வி அறிவித்தல்

## சலவைச் சேவை ஒப்பந்தம் - 1994

1994ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பெருநிலத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு சலவைச் சேவையை வழங்குவதற்கான கேள்விகள் 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05ஆம் திகதி முற்பகல் 10-00மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் படிவம் வழங்குவதற்கான கடைசி நாள் 04-11-1993 மதியம் 12மணியாகும். முழுவிபரங்களையும் 29-10-1993இல் வெளியாகும் அரசாங்க வர்த்தமானியில் அல்லது எனது பணிமனையில் பார்வையிடலாம்.

ஒப்பம்: வைத்தியகலாநிதி.
பொ. இரத்தினசபாபதி,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
சு. சே. பி. ப. பணிமனை,
விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-6224)


# கொழும்பு செல்லும் நோயாளருக்கு

யாழ்ப்பாணம், ஒக். 14

கொழும்பில் சிகிச்சை பெற சிபாரிசு செய்யப்பட்ட நோயாளர்களை எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு, கப்பலுக்கு பதிவு செய்வதற்காக யாழ். பொது வைத்தியசாலைக்கு சமுகமளிக்கும்படி வைத்தியசாலைப் பணிப்பாளரால் கேட்கப்பட்டுள்ளது.

பதிவு செய்பவரும் நோயாளர் வைத்திய நிபுணரின் சிபாரிசுக் கடிதம், அடையாள அட்டை, மற்றும் ஆவணங்களுடன் சமுகமளிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-15)

## நாளை

யாழ்ப்பாணம், ஒக். 14

பாலர் பாடசாலை திட்ட ஒருங்கிணைப்புக் கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பணிமனையில் நடைபெறும்.

இணையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கலந்துரையாடலில், யாழ். மாவட்டத்தில் பாலர் பாடசாலைத் திட்டத்தில் ஈடுபட்டு வரும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் கலந்துகொள்ள உள்ளன.

பாலர் பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தேவைகள் என்பன குறித்து கலந்துரையாடலில் ஆராயப்படும். (இ-162)

o o o

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீசெல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கலாவிநோதன் சின்னமணி ''பக்தியால்'' என்னும் பொருளில் உரை நிகழ்த்துவார். (க)

## நிதி ஒதுக்கீடு

கொழும்பு, ஒக். 14

யாழ்ப்பாணப் பிராந்தியக் கல்வித் திணைக்களம், கோட்ட மட்டத்தில் கல்விக் கண்காட்சியை நடத்தவும் கற்பித்தல் கருத்தரங்குகளை நடத்தவும் 6 கோட்டக் கல்வி நிலையங்களுக்கும் 24 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

கோட்ட மட்டத்தில் வேலணைக்கு 3 ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறைக்கு 4 ஆயிரம் ரூபாவும், யாழ்ப்பாணத்துக்கு 4 ஆயிரம் ரூபாவும், மருதனார்மடத்துக்கு 5 ஆயிரம் ரூபாவும், சாவகச்சேரிக்கு 3 ஆயிரம் ரூபாவும், பண்டத்தரிப்புக்கு 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. (ஓ-க)


# A/L 94/95

★ பிரத்தியேக வகுப்பு மாணவர்கள் பின்வரும் நேர அட்டவணைப்படி சமுகம் அளிக்கவும்.

1993—10—15 வெள்ளி

A/L 95
மாலை 3 மணி

A/L 94
மாலை 5 மணி

கணக்கியல்

ஆசிரியர்:
D. SAM

(27640)


# இரண்டு வாரங்களுக்குள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்

யாழ். செயலக பதிவுக் காரியாலயத்தில் பிறப்பு, இறப்பு மற்றும் திருமண அத்தாட்சிப் பத்திரங்களுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு 2 வாரங்களுக்குள் அவை தற்போது அனுப்பி வைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னர் இதற்கென விண்ணப்பித்தவர்கள் அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற பல வருடங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது.

மாவட்ட காணிப் பதிவாளரும் மேலதிக பதிவாளருமான திரு. நா. சதாசிவஐயரின் மேற்பார்வையிலேயே யாழ். செயலக பதிவுக் காரியாலயத்தின் வேலைகள் நடைபெறுகின்றன. (த-167)

தென்மாகாண சபையின்

# அவைத் தலைவர் பதவி காமினி கட்சியினருக்கு

## இரு அமைச்சர்களும் நியமனமாவர்

கொழும்பு, ஒக். 14

தென்மாகாண சபையின் அவைத் தலைவர் பதவியையும் இரண்டு அமைச்சர் பதவிகளையும் காமினி திசநாயக்க தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினருக்கு வழங்க பொது மக்கள் முன்னணி இணங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை —

வடமேல் மாகாணசபையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினருக்கு இன்னொரு அமைச்சர் பதவியை கொடுக்கவும் சுதந்திரக் கட்சியின் தலைமையிலான பொது மக்கள் முன்னணி சம்மதித்துள்ளது. (ஓ எ)

# கடந்த மாதத்துக்கான உலர் உணவு விநியோகம்

இடம் பெயர்ந்தவர்களுக்கான செப்டம்பர் மாத உலர் உணவுப் பொருள்கள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

அரிசி, மா, சீனி, பருப்பு, சொண்டர்லைட் சோப் ஆகியவற்றுடன் இரண்டு அங்கத்தவர்களுக்கு மேல் உள்ள குடும்பம் ஒவ்வொன்றிற்கும் ஹைலண்ட் பால்மாவும் வழங்கப்பட்டு வருகின்றது.

செப்டம்பர் மாதத்திற்கான புதிய உலர் உணவு முத்திரைகள் கிராம சேவையாளர் ஊடாக ஏற்கனவே பலருக்கு வழங்கப்பட்டு விட்டது. ஏனையோர் முத்திரைகளை தற்போது கிராம சேவையாளர்களிடம் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-162)

உளவியல் தாக்கங்களை போக்க

# சமூக நிறுவன பங்களிப்பு மிகவும் அவசியமானது

யாழ்ப்பாணம், ஒக். 14

''போர்ச் சூழ்நிலைகளால் இடம்பெயர்ந்த மாணவர்கள் மத்தியில் ஏமாற்றமும் விரக்தியும் அதிகமாக காணப்படுகின்றன. கல்வியில் இலக்கை அடையவேமோ என்ற பயவுணர்வும், குடும்பங்களில் நிலவும் விரக்தியுணர்வும் உளவியல் தாக்கங்களை அதிகரிக்கச் செய்கின்றன. இதனைப் போக்குவதற்கு சமூக நிறுவனங்கள் தமது பங்களிப்பைச் செய்வது அவசியமானது''

''நாம்'' உளவியல் சஞ்சிகை நடத்திய ''நெருக்கீடுகளும் அதினின்று விடுபடுதலும்'' என்ற தலைப்பிலான ஆய்வரங்கில் யாழ்ப்பாணம் மேற்கு கோத்தணி அதிபர், திருமதி பி. எம். சின்னத்துரை இவ்வாறு தெரிவித்தார். ஆய்வரங்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய பணிமனையில் திரு. ஜோசப்பாலா தலைமையில் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் —

''புலம் பெயர்ந்த மாணவர்களை அரவணைத்து புரிந்துணர்வு மூலமும், உளப்பாதிப்பை நன்குணர்ந்து அவர்களுக்கு சமவாய்ப்பு வழங்கி அவர்களை நடத்துவதன் மூலம், எதிர்காலத்தை வளம்படுத்த முடியும்'' என்றார்.

குருமட அதிபர் அருள்திரு ஜீவாபோல் உரையாற்றுகையில், பிரச்சினைகளுக்கு ''நான்'' தான் காரணமாகும். ஒவ்வொருவருடைய மன ஆளுமை மனிதமனங்களில் பெரும் சக்தியாக உள்ளது. பிரச்சினைகள் உருவாகுகின்றபோது, எமது மனத்தினால் மட்டுமே அதனை ஈடுசெய்ய முடியும். இதற்கு மனம்பக்குவப்பட்ட நிலையிலே எதிர்கொள்ளலாமென கூறினார்.

நிகழ்ச்சியில் சாந்திகம் உளவியல் ஆலோசகர் திரு. ஏ. எப். சி. ஆனந்தராசாவும் உரையாற்றினார். (க)

## பிரிவுபசாரம்

தொல்புரம் அரசினர் வைத்தியசாலையில் 6 ஆண்டுகள் கடமையாற்றி மாற்றலாகிச் சென்ற வைத்திய கலாநிதி எஸ். மயில்வாகனத்தின் சேவையைக் கௌரவித்து பிரிவுபசார விழா ஒன்று அண்மையில் மேற்படி வைத்தியசாலை அபிவிருத்தி சபையால் நடத்தப்பட்டது. (க-28)
(க-30)


## ஹென்றி டுனாட் ஞாபகார்த்த விழா

ஒக்டோபர் 16, 17

மேற்படி வலி வடக்கு பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட விழா, கால நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனை மனவருத்தத்துடன் தெரியப்படுத்துவதுடன், இதனையொட்டிய ஒத்துழைப்பு தந்தோருக்கு நன்றி கூறுகின்றோம்.

இலங்கை செஞ் | சங்கம்,
வலி. வடக்குப் பிரிவு

க. அருந்தவராஜா,
தலைவர்.

(27644)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# கொழும்பு மாநகர மேயரை இடைநிறுத்துவதற்கு முயற்சி

## மேல்மாகாணசபை அரசுடன் மோதும்?

கொழும்பு, ஒக். 14
சுதந்திரக் கட்சியின் ஆதிக்கத்தில் உள்ள மேல்மாகாண சபை, கொழும்பு மாநகர சபையின் மேயர் ரட்ணசிறி ராஜபக்ஷவை இடை நிறுத்தி வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக கொழும்பு பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகியுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் திருப்தியற்ற நிர்வாகம், ஒழுங்கீனங்கள் போன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் மேயரை இடைநிறுத்தி வைக்க மேல் மாகாண சபையின் முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க முயற்சி மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேல்மாகாண சபையின் அதிகாரத்தின் கீழ் வரும் கொழும்பு மாநகரசபையின் திருப்தியற்ற நிர்வாகத்தால் கொழும்பு நகரம் நாற்ற மெடுப்பதாகவும் —

40 கோடி ரூபா மேலதிக வரிக் கடனில் (ஓவர் டிராப்ட்) இச்சபை இயங்குவதாகவும் — மாகாண சபையின் பேச்சுரைத்து, சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி தெரிவித்தார்.

இக்காரணங்களால் இந்த சபையின் மேயர் ராஜபக்ஷவை இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் —

மேயர் மீது 9 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாகவும் — அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு மேயர் இடைநிறுத்தி வைக்கப்பட்டதும் மாவட்ட நீதிமன்ற அல்லது உயர்நீதிமன்ற நீதிபதி குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய நியமிக்கப்படலாம் என்றும்—

குற்றவாளியாக அவர் காணப்படும் பட்சத்தில் அவரின் சிவில் உரிமைகளை நீக்கும் சட்டங்கள் மேல்மாகாண சபையில் நிறைவேற்றப்படும் என்றும்— அவர் கூறினார்.

ஐ. தே. கவில் செல்வாக்கு மிக்க மேயர் ராஜபக்ஷ தற்சமயம் அமெரிக்காவுக்குச் சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆளும் ஐ. தே. கவுக்கு சவாலாகவே மேல்மாகாண சபை இந்த முயற்சியை எடுத்துள்ளதாக அவதானிகள் கருத்து வெளியிட்டனர். (ஓ-3)

### சங்கானையில் கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 14
சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் அண்மையில் கல்விக் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. இக்கண்காட்சியை ஆண்டு 7இல் கற்கும் மாணவர்களும் அவ்வகுப்பில் தமிழும் சமூகக் கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்களான திரு. ஏ. குணரத்னம், திரு. இ. சிறீதரன் ஆகியோரும் ஒழுங்கு செய்தனர். (ஐ)

வடபிராந்திய
யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்
அளிக்கும்
நிதியுதவி
கலை நிகழ்ச்சிகள்

இடம்: சென். பற்றிக்ஸ் கல்லூரி
காலம்: 16 – 10 – 1993
நேரம்: இரவு 6மணி

நிகழ்ச்சிகள்

1. பருத்திநகர் சாண்டோ எம். துரைரத்தினம் அவர்களினால் நடத்தப்படும் "வீரதீரச் செயல்கள்" முதல் முறையாக யாழ். நகரில் அரங்கேறவுள்ளன.
 (அ) நெருப்பு புதைகுழியில் சில மணி நேரம் படுத்திருத்தல்
 (ஆ) இரண்டு உழவு யந்திரத்தை எதிர் எதிராக ஒரே நேரத்தில் உடலில் ஏற்றுதல்
 (இ) அதிபாரம் கொண்ட லொறியினை மார்பில் ஏற்றுதல்
 (ஈ) ஓடும் வாகனத்தை தொண்டையினால் இழுத்துப் பிடித்து நிறுத்துதல்
 (உ) 35 கிலோ எடையுள்ள இரும்புக் குண்டினை 7 அடி உயரத்திலிருந்து வயிற்றில் ஏந்துதல்
 (ஊ) பாரம் கொண்ட கல்லை மார்பின் மேல் வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்
 (எ) இன்னும் பல வீரதீரச் செயல்கள்
2. திரு. மோகன் மாஸ்ரர் அவர்களினால் நடத்தப்படும் கராட்டி விளையாட்டுக்கள்.
3. கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களின் பட்டிமன்றம்.
4. கலை, பண்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் நாடகம்.

ரிக்கெட் கிடைக்குமிடங்கள்:

1. "வெல்கோ", ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
2. "குறிஞ்சி", திருநெல்வேலி சந்தை.
3. "நாதன் மருந்தகம்", கல்லியங்காடு.
4. "தாவடி வெடிக்கல்", கோண்டாவில்.
5. "வெடி இன்குயரி", மானிப்பாய்.
6. "வெடி பீஸல்", சங்கானை.
7. "ஸ்ரீமுருகன்", நெல்லியடி.
8. ஸ்ரீமுருகன்" பருத்தித்துறை.
9. "அம்மாள் மார்கலி", சாவகச்சேரி.

குறிப்பு:
யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெறவிருந்த நிகழ்ச்சிகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம். சிரமத்திற்கு மன்னிக்கவும்.

— வ. யா. ஆ. ம. வ. சங்கம்.

(இ-6184)

# யாழ்தேவி நடவடிக்கை தற்கொலைப் பயணம்

## ராணுவ அதிகாரி எச்சரித்தாராம்

யாழ்தேவி ராணுவ நடவடிக்கை மூன்று வாரங்களாக தாமதிக்கப்பட்ட நிலையில் இருந்ததாகவும் —

இது தொடர்பாக கட்டளைப் பீட உயர்நிலை மாநாடு ஒன்றில் இத்தாக்குதலுக்கு படையினரை நடத்தும் படி சிரேஷ்ட அதிகாரி ஒருவர் பணிக்கப்பட்டபோது, அவர்—

"இப்படியான தற்கொலை பயணங்களை தாம் மேற்கொள்ளத் தயாராக இல்லை" என்பதைத் தெரிவித்ததாகவும் "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

# ஒரே அணியில் மட்டும் 70 படையினர் பலி!

கொழும்பு, ஒக். 14
யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின்போது, இடம் பெற்ற ஒரு தனி மோதலில் மட்டும் 70க்கு அதிகமான படையினர் கொல்லப்பட்டனர் என்றும் —

அவர்கள் அனைவரும் ஒரே படையணியைச் சேர்ந்தவர்கள் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நடவடிக்கையின் போது இராணுவத் தரப்பில் 150க்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதும், அவர்களில் 7 பேர் அதிகாரிகள் என்பதும் தெரிந்தவையே. (ஓ-ஏ)

## மேசர் டாங்கிகள் பறிபோயின;

# ஆயுத இழப்புக்குறித்து சிங்கள மக்கள் அதிர்ச்சி

கொழும்பு, ஒக். 14
பல மைச்சக்கணக்கான ரூபா பெறுமதியான போர்த் தளவாடங்கள் மற்றும் ஆயுதங்களை யாழ்தேவி நடவடிக்கையின்போது படையினர் இழந்தனர் என்று கொழும்பு ஆங்கில, சிங்கள, தமிழ் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

படையினர் இழந்த இரு பிரதான போர் டாங்கிகள் மற்றும் இராணுவத் தளபாடங்களின் படங்களும் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளது;

படையினருக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கள் குறித்து சிங்கள மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஷப்றா நிறுவன நிதிமீளளிப்பு நாடாளுமன்றில் பிரஸ்தாபம்

## 3 வருட காலத்தில் திருப்பச் செலுத்தப்படும்

ஷப்றா புளிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் நிறுவனம் பணம் வைப்புச் செய்திருந்த வாடிக்கையாளர்களுக்கு மூன்று வருட காலத்திற்குள் பணத்தைத் திருப்பி செலுத்த இணங்கியுள்ளது.

நீதி அமைச்சரும், நீதி இராஜாங்க அமைச்சருமான ஹரோல்ட் ஹேரத் நாடாளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

"ஷப்றா" நிறுவனம் குறித்து யாழ். மாவட்ட எம்.பி திரு. கே. நவரத்தினம் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாடிக்கையாளர்களுக்கு பணத்தைத் திருப்பிச் செலுத்துவது தொடர்பான வழிகாட்டல்கள் மத்திய வங்கியின் நாணய சபையினால் இக்கம்பனிக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

1-9-1993 முதல் 31-8-94 வரையான ஒரு வருட காலப் பகுதியில் 10 கோடி 27 லட்சம் ரூபாவை வாடிக்கையாளர்களுக்கு திருப்பிச் செலுத்த வேண்டும்.

இத்தொகையில் 6 கோடி 52 லட்சம் ரூபா 31-12-1993 வரையான காலகட்டத்தில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

01-01-94 முதல் 30-4-94 வரையான காலகட்டத்தில் 2 கோடி 45 லட்சம் ரூபாவும் —

01-05-1994 முதல் 31-8-94 வரையான காலகட்டத்தில் ஒரு கோடி 30 லட்சம் ரூபாவும் —

01-09-1994 முதல் அடுத்த ஓராண்டு காலகட்டத்தில் 5 கோடி 57 லட்சம் ரூபாவும் — மீளச் செலுத்தப்படும்.

அதன் பின்னர் —

நிலுவையாக இருக்கும் பணமும் முழு வைப்புத் தொகைக்கான — 01-07-93 வரையான — வட்டியும் அடுத்த ஓராண்டில் வழங்கப்படும்.

— இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார். (உ-3)

அரசாங்க கேள்வி அறிவித்தல்
உணவு விநியோக ஒப்பந்தம் - 1994

1994 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பெரும்பாகத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த உணவு வழங்குவதற்கான கேள்விகள் 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5 திகதி முற்பகல் 10-00 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் படிவம் வழங்குவதற்கான இறுதித் திகதி 04 – 11 – 1993 மதியம் 12-00 மணியாகும். முழுவிபரமும் 29 – 10 – 1993 இல் வெளிவரும் அரச வர்த்தமானியில் அல்லது எனது பணிமனையில் பார்வையிடலாம்.

ஒப்பம்:

வைத்திய கலாநிதி
பொ. இரத்தினசபாபதி,
சுகாதார சேவைகள் -
பிராந்திய பணிப்பாளர்,
சு.சே.பி. பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

(இ-6223)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கண்ணாடி அலுமாரிகள், சோக்கேஸ்கள், றாக்கை, பலசரக்குப் பெட்டகை, மேசை, 2"x2" கல்லைகள் நெற், சனல் றாடா, தராசுகள் இன்னும் பல சாமான்கள் விற்பனைக்குண்டு. 55, சினியர் லேன், கண்டி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (6588)

### வர்த்தகமும் கணக்கியலும்

வர்த்தகமும் கணக்கியலும் G.C.E. O/L வகுப்புக்கான 1986 தொடக்கம் 1992 வரை 7 வருட கடந்த கால வினா-விடை உள்ளடக்கியது. ஆக்கம்: இ. செல்வநாயகம். கணக்கியல் ரூபா 45/- வர்த்தகம் ரூபா 60/- தொடர்பு: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-6197)

### ஆனந்தம் சியாக்காய்

பேன், சொடுகு, அழுக்கு அகற்றி கேசம் வளர்கிறது இந்த மருத்துவ ஆலோசனைப்படி தயாரிக்கப்பட்ட ஆனந்தம் சியாக்காய் பவுடர் 25 கிராம், 100 கிராம் என்று கேட்டு வாங்குங்கள். குகன் ஸ்டோர்ஸ் - யாழ்நகர், செட்டிகடை - கொழும்புத்துறை, மூ. சச்சிதானந்தா - வியாபாரிமூலை- பருத்தித்துறை. தயாரிப்பாளர்: ஆனந்தம், கைதடி. (6534)

### தவறிவிட்டது

13-10-93 புதன்கிழமை காலை சுதுமலை அம்மன் கோயிலுக்கு அண்மையில் குடும்ப அட்டை (2) உள்வரவு பாஸ், 5 படம், திருமண பதிவுக் கொப்பி, 20,000/- பணம் ஆகியன அடங்கிய சொப்பிங் பையுடன் தவறிவிட்டது. எடுத்தவர்கள் கருணை கூர்ந்து ஜெகபதி தையலகம், அந்தோனியார் கோயிலடி, மானிப்பாய் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் தரப்படும். (6539)

O/L
PAPER CLASS

ஆரம்பம்:-
16—10—1993

✶ வாரத்தில் 6 நாட்கள்
✶ சகல பாடங்களும்

நாவலர் கல்விக் கழகம்
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(87689)


## வட மாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரி கல்வி மற்றும் கல்விசார் உத்தியோகங்களுக்கான

# வெற்றிடம்

**(நிரந்தரம் / தற்காலிகம் / வருகைதரு)**

பின்வரும் வெற்றிடங்களுக்கு தகுதிவாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கணக்கியல் மற்றும் நிதி, சிரேஷ்ட விரிவுரையாளர்
ஆங்கிலம் சிரேஷ்ட விரிவுரையாளர்
கணிதவியல் விஞ்ஞான சிரேஷ்ட விரிவுரையாளர்

**சம்பள அளவுத்திட்டம்:**

மாதாந்தம் ரூ. 10,650 — 5 x 825 — ரூ. 12,275 மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் 31 - 12 - 1993 வரை ரூபா 9,825/- மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் 01 - 01 - 1994 ஆம் திகதியில் இருந்து ரூபா 10,650 உடன் ஏனைய கொடுப்பனவுகள்.

**கல்வித் தகைமைகள்:**

1. (i) தொடர்புடைய விடயத்தில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிடம் இருந்து பெறப்பட்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேற் பிரிவு) சிறப்புப் பட்டப்படிப்பு அல்லது
(ii) தொடர்புடைய விடயத்தில் சிறப்புப் பட்டப்படிப்பில் இரண்டாம் வகுப்பு (கீழ் பிரிவு) சித்தி அல்லது
(iii) தொடர்புடைய உயர்கல்வி நிறுவனமொன்றின் விதந்துரையின் பேரில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஏதேனும் தொழில்சார் தகைமைகள்
வித்துடன்

2. (i) தொடர்புடைய விடயத்தில் பட்டப்பின் படிப்பு இத்தகைய பட்டப்பின் படிப்புக்கான பதிவுக்காலம் இரண்டு கல்வி வருடங்களுக்கு குறைந்திராததாக இருத்தல் வேண்டும் அல்லது
ii) தொடர்புடைய உயர்கல்வி நிறுவனமொன்றின் விதந்துரையின் பேரில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஏதேனும் தொழில்சார் தகைமைகள்
வித்துடன்

3. முன் குறிப்பிட்ட (2 ஆம் பிரிவில் சொல்லப்பட்ட கல்வித் தகைமையை பெறுவதற்கு செலவிட்ட காலம் உள்ளடங்கலாக அல்லது பின்வரும் பதவிகளில் நிரந்தரமாக உதவி விரிவுரையாளராக இந்த சந்தர்ப்பத்தில் அல்லது அதற்குச் சமமான நிரந்தரமான பதவிகளில் 6 வருடகால அனுபவம்.
(அ) பல்கலைக்கழக மட்டத்திலான கற்பித்தல்
(ஆ) தொழில்சார் அனுபவம்
(இ) அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றில் ஆய்வு

02. கல்லூரி விரிவுரையாளர் (தகுதி காண் நிலை) கணக்கியல் மற்றும் நிதி

**சம்பள அளவுத்திட்டம்:**

ரூ 5270 — 6 X 130 — ரூ 6050 மாதாந்தம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் 31—12—1993 வரையில் ரூ. 4,585 மற்றும் ஏனைய கொடுப்பனவுகளும் 01-01-1994 ஆம் திகதியில் இருந்து ரூ 5,270 மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்.

**கல்வித்தகைமைகள்:**

(i) தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிடம் இருந்து பெறப்பட்ட முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு சிறப்புப் பட்டம் அல்லது அதற்குச் சமமான வேறு ஏதும் தகுதிகள் அல்லது
(ii) சிறப்புப் பட்டமொன்றில் அல்லது பொதுப் பட்டமொன்றில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன் தொடர்புடைய துறையில் பட்டப்பின் படிப்பு அல்லது
(iii) ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட வேறு ஏதேனும் தொழில்சார் தகுதிகள்.

**வயது:**

35 வயதுக்கு மேற்படலாகாது.

3. விண்ணப்பப்பத்திரங்கள், முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள், அனுபவம் மற்றும் வேறு ஏதும் தொடர்புடைய தகவல்கள் போன்றவற்றினை உள்ளடக்கியதாக இரு நடுவர்களின் பெயர் விபரங்களுடன், உதவிப் பதிவாளர், வடமாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி, புகையிரத நிலைய வீதி, வவுனியா என்ற முகவரிக்கு 22 ஒக்டோபர் 1993 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கும்படி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கல்வி மற்றும் கல்விசார் பதவி" என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் / கல்வி நிறுவனங்கள் / அரசாங்க திணைக்களங்கள் / அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட அமைப்புக்கள் ஆகியவற்றில் இருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் அவ்வவ் நிறுவனங்களின் தலைவர்களினூடாக விண்ணப்பிக்க வேண்டும். எனினும், விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தின் பிரதியொன்றினை மேற்படி முகவரிக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.
விண்ணப்ப முடிவு திகதிக்கு பின்னர் வரும் விண்ணப்பங்களும் பூரணமற்ற விண்ணப்பப்படிவங்களும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

— பணிப்பாளர்.

வடமாகாண இணைக்கப்பட்ட-
பல்கலைக்கழக கல்லூரி,
புகையிரத நிலைய வீதி,
வவுனியா,
20, செப்டம்பர் 1993. (இ-6229)


# A/L 95

## பிரத்தியேக கணக்கியல் வகுப்பு

பிரிவு III

ஆரம்பம்: 1993 - 10 - 15
வெள்ளி 4 மணி

ஆசிரியர்: D. SAM

(87641)

## விக்னா கல்வி நிலையம்

ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## DAY CLASSES

பிரிவு - I வினா-விடை வகுப்பு
பிரிவு - II மீட்டல் வகுப்பு

புதிய அலகுகள் ஆரம்பம்:
14-10-1993 (இன்று) 8 மணி

பொருளியல் — க. கலாகரன்
கணக்கியல் — S. K. பிரபாகரன்
வர்த்தகம் — வரதன்
அளவையியல் — A. பிரபாகரன்

(சி-6194)

## புதிய LONDON ACCOUNTANCY CLASSES May - June 1994

C. I. M. A. Stage - I
A. A. T. Inter

ஆரம்பம்: 18 - 10 - 1993

விவரங்களுக்கு:
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. Peter's Lane,
Hospital Road, Jaffna.

(சி-6191)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பிணக்கின் உள்வடிவம்

யாழ்ப்பாணத்தில் இராணுவ நடவடிக்கையின் போது, தாம் கைப்பற்றிய இடங்களிலிருந்து இராணுவத்தினர் வாபஸாகிச் சென்றது ஏன்?

பலத்த இழப்பின் மத்தியில் பிடித்த இடங்களை விட்டுச் சென்ற பின்னர், இராணுவம் தனது இலக்கை அடைந்து, தாக்குதலில் வெற்றி கண்டு விட்டதாகச் சொல்ல முடியுமா?

கொழும்பில் அரசியல் வட்டாரங்களிலும், பாதுகாப்புத் துறை வட்டாரங்களிலும் மேற் சொன்ன இரண்டு கேள்விகளும் தொடர்ந்து கேட்கப்பட்டு வருகின்றன. கடந்த ஒரு வார காலத்துக்கு மேலாக இக்கேள்விகளுக்குப் பல தரப்பட்டவர்களும் பதில் கூறி வருகிறார்கள். ஆனால் அந்தப் பதில்கள் ஆளுக்கு ஆள் வேறுபட்டதாகவும், பதிலுக்குப் பதில் முரண்பட்டதாகவும் உள்ளன.

அந்த காரண வேறுபாடுகளுக்கும், முரண்பாடுகளுக்கும் இடையில் அரசு - பாதுகாப்பு படையினர் இடையேயான பிணக்குக் கூட இவ்வாபஸுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

இராணுவம் நிலைகொண்டு சாவகச்சேரியை முன்னேறுவதற்கு ஆயத்தம் போதாது என்பதால் மேலதிக துருப்புகளை கிழக்கிலிருந்து தருவிக்கப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் விரும்பினார்கள்.

கிழக்கிலிருந்து படைகளை வடக்கே அனுப்புவதானால், கிழக்கில் எதிர்வரும் பெப்ரவரியில் தேர்தலை நடத்தக்கூடியதாக அப்பிரதேசத்தைப் பாதுகாக்க முடியும் என்று இராணுவம் உத்தரவாதம் தரவேண்டும் என்று அரச உயர்பீடம் நிபந்தனை விதித்தது. அதற்கான உறுதியை வழங்கமுடியாத நிலையிலேயே துருப்புக்கள் வாபஸ் பெறப்பட்டன என்று கூறப்படுகிறது.

இதன் பிணக்கிலிருந்து ஒரு முக்கிய விடயம் வெளிக்கொணரப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு பகுதிகளை அரசு - அராஜகப்பகைகள் — முற்றாகத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்குப் போதிய துருப்புக்கள் இல்லை என்ற நிலையை பாதுகாப்புத்துறைத் தலைமைப்பீடம் முன்வைக்கிறது.

இராணுவத் தீர்வை முழுக்க முழுக்க நாடி நிற்கும் விஜேதுங்கா அரசு, கிழக்கில் ஒரு தேர்தலை நடத்தி தனது இராணுவ உருவத்துக்கு மேலாக ஆட்சியில் — ஜனநாயக — ஆடையைப் போர்த்த நினைக்கிறது.

அவ்வாறு செய்தால் மட்டுமே, இங்கு நடக்கும்போரை நிறுத்துமாறு வெளியில் இருந்து வரக்கூடிய அழுத்தங்களைத் தடுக்கலாம். மூன்றாம் பேர்வழிகளினது மத்தியஸ்தங்களை தவிர்க்கலாம். எமது பிரச்சினையை நாமே தீர்த்துக் கொள்வோம் என்று கூறி தப்புவதுடன், தவிர்ப்புகளையும் நியாயப்படுத்தலாம்.

ஆனால் இராணுவத் தலைமைப்பீடமோ, வடக்கையும் கிழக்கையும் ஒரே நேரத்தில், முற்றுமுழுவதாக தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதானால் இப்போதுள்ளதைவிட மேலதிக ஆட்பலமும் ஆயுதபலமும் தேவை என்ற நிலைப்பாட்டைக் காட்டுகிறது.

இந்த இருகோடுகளும் சந்தித்து, இருசாராரும் (அரசும், இராணுவமும்) நினைப்பது நடப்பதற்கு, யுத்தம் தொடர வேண்டும். நாட்டின் வளங்களை அதன்பொருட்டு விரயமாக்கி, அழிவுப் பாதையில் தொடர்ந்து நடைபோட வேண்டும். அதனால் பெருகும் நட்டமும் அழிவும் தமிழர்களுக்கு மட்டுமன்றி சிங்களவர்களுக்கும் தான்! இதனைச் சிங்களத் தலைவர்கள் எப்போது உணரப் போகிறார்கள்? பேசியவாறு மாயையை நீக்கினால் மட்டுமே அது சாத்தியம்.

## கரவெட்டியில் மின்னலுக்கு ஒருவர் பலி

நெல்லியடி, ஒக். 14

கரவெட்டி - வாரிக்குப் பகுதியில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் காலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கந்தன் தேவராசா (வயது 28) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோதே இச்சம்பவம் இடம் பெற்றது.

இவருடன் வேலை செய்து கொண்டிருந்த மற்றும் இருவர் இச்சம்பவத்தின் போது மயக்கமடைந்தனர். (இ-109)

## பட்டதாரி ஆசிரியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை

### விண்ணப்பம் கோரப்படுகிறது

கொழும்பு, ஒக். 14

தற்சமயம் பட்டதாரி ஆசிரியர் பதவியணிக்குள் சேராத, ஆயினும் பட்டம் பெற்றபின் 1-6-93 இல் ஓராண்டு சேவையை பூர்த்தி செய்துள்ள சகல ஆசிரியர்களையும் நிரந்தர பட்டதாரி பதவியணிக்குள் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் வடக்கு - கிழக்கு மாகாண சபை கல்வி அமைச்சால் கோரப்பட்டுள்ளன.

இதுபற்றிய விபரங்கள் 28.9.93 ஆம் திகதியிடப்பட்ட சுற்று நிருபம் மூலம் கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும்-

தகுதியுள்ள ஆசிரியர்கள் தங்கள் பாடசாலை அதிபர்கள் ஊடாக உரிய படிவத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் - வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு செயலாளர் எம்.ஏ. சீ. முகைதீன் தெரிவித்துள்ளார், (இ-3-178)

## நாய் குதறிய ஒரு நாள் சிசு!

யாழ்ப்பாணம், ஒக். 14

பிறந்து ஒருநாள் எனக் கருதப்படும் சிசு ஒன்று நாய்கள் குதறிய நிலையில் மீட்கப்பட்டு, அவ்விடத்திலேயே புதைக்கப்பட்டது.

நாவற்குளி, தச்சன்தோப்பு கோவிலாக்கண்டி வயல் பகுதியிலேயே கடந்த சனிக்கிழமை சிசுவின் சடலம் மீட்கப்பட்டது.

இது குறித்து இளம் பெண் ஒருவரை காவல் துறையினர் விசாரித்து வருகின்றனர். (ஓ-15)

## முகத்துவாரம் சம்பவம்; 58 தமிழர்கள் கைது

கொழும்பு, முகத்துவாரப் பகுதியில் சக்திவாய்ந்த குண்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து, அப்பகுதியை படையினர் சுற்றி வளைத்து நடத்திய தேடுதல்களில் இதுவரை 58 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முதலாவது தேடுதலில் 33 இளைஞர்களும், இரண்டாவது தேடுதலில் 25 இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஓ-3)

## 'ஆதாரம்' வெளியானது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சமூக பொருண்மிய விஞ்ஞான ஆய்வு இதழான ஆதாரம் 10 ஆவது இதழ் புரட்டாதி - ஐப்பசி மாத வெளியீடாக புதுப் பொலிவுடன் விவசாய சிறப்பிதழாக வெளிவந்துள்ளது.

இந்த இதழில் "தமிழீழ பொருண்மிய விவசாயத்தில் இன்றும் நாளையும்", தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நடவடிக்கைகளால் வளர்ச்சி பெற்றுவரும் "விவசாயப் பொருண்மியம்" எனும் சிறப்புக் கட்டுரைகளுடன் சேனைக் கிட்டு தொடர்பான சிறப்புக் கவிதையும், "எதிர் கொள்வல்", "ஆச்சியின் மண்" ஆகிய சிறுகதைகளையும் குறுக்கெழுத்துப் போட்டி ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது. (ஓ)

## விரிவுரையாளர் பதவிகள்

கொழும்பு, ஒக். 14

கொழும்புப் பல்கலைக்கழகம் உதவி விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பங்களைக் கோரியிருக்கிறது.

இரசாயனவியல், விலங்கியல், பௌதிகவியல், தாவரவியல், கணிதம், கொம்பியூட்டர் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான தற்காலிக உதவி விரிவுரையாளர்களாக விரும்புவோர் இதற்கு விண்ணப்பிக்கலாம் என்று இலங்கை வானொலியின் தமிழ் ஒலிபரப்பில் அறிவிக்கப்பட்டது.

விண்ணப்பங்களை பதிவாளர், 94, குமாரதுங்க முனிதாஸ மாவத்த, கொழும்பு-3 என்ற முகவரிக்கு அனுப்புமாறும் —

விண்ணப்ப முடிவு திகதி இந்த மாதம் 22ஆம் திகதி என்றும் அறிவிக்கப்பட்டது. (ஓ-8)

## படையினருக்கு வாங்கிய மாருதி ஜீப்புகள் குறித்து கேள்வி எழுப்புகிறார் டி.ஐ.ஜி.

கொழும்பு, ஒக். 14

இந்திய தயாரிப்பான மாருதி ஜீப்களைக் கொள்வனவு செய்த விவகாரம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுக்கும் பொலீஸ் திணைக்களத்துக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

வடக்கு, கிழக்கு யுத்தத்தில் பாவிப்பதற்கு உகந்ததாக மாருதி ஜீப்புக்கள் காணப்படவில்லை என்று தற்போது விடுமுறையில் சென்று இருக்கும் பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா கூறியுள்ளார்.

மட்டுப்படுத்தப்பட்ட நிர்வாகக் கடமைகளுக்கு மட்டுமே மாருதி ஜீப்களைப் பயன்படுத்தக் கூடியதாக இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

இந்திய அரசுக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையேயான உடன்பாட்டின் அடிப்படையில் தான் மாருதி ஜீப்கள் கொள்வனவு செய்யப்பட்டன என்று பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சிறில் ரணதுங்கா பொலீஸ் மா அதிபருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

விலை கூடிய லாண்ட் றோவர்களிலும் பார்க்க மாருதி ஜீப்கள் 'பலவேகய-2' இராணுவ நடவடிக்கையில் சிறந்த முறையில் செயல்பட்டன என்றும் திரு. சிறில் ரணதுங்கா கூறினார்.

## வாதுவ கப்பல் வருகிறது

யாழ்ப்பாணம், ஒக். 14

கொழும்பில் இருந்து நேற்று தண்பகல் புறப்பட்ட 'வாதுவ' கப்பல் நாளை மறுதினம் சனிக்கிழமை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். செயலகத்துக்கு ஆயிரம் மெற்றிக் தொன் மாவும்—

தனியாருக்கு தேங்காய் எண்ணெய் மற்றும் சரக்கு பொருள்களும் —

யாழ் வைத்தியசாலைக்கு பிரிட்டிஷ் அரசு வழங்கிய உபகரணங்களில் ஒரு தொகுதியும் — இக்கப்பலில் எடுத்து வரப்படுகின்றன, என்றும் —

அதேவேளை — பருத்தித்துறையில் பொருள்கள் இறக்கி முடித்த 'கோமாகி' கப்பல் நேற்று காங்கேசன்துறைக்கு சென்றுள்ளதாகவும் —

அங்கு பொருள்கள் இறக்கி முடித்து மீண்டும் பருத்தித்துறைக்கு வந்து திருகோணமலை செல்லவுள்ள பயணிகளை அது ஏற்றிச் செல்லும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

## விளையாட்டு நிகழ்வுகள்

அரியாலை சிற்றம்பலம் விளையாட்டுக் கழகம் நடத்தும் விளையாட்டுப் போட்டிகளின் இறுதியாட்டங்களும் பரிசளிப்பு விழாவும் இன்று மாலை 4 மணி முதல் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரபல கிரிக்கெட் வீரர் திரு. க. சூரியகுமாரும், சிறப்பு விருந்தினராக நல்லூர் கொத்தணிப் பாடசாலைகள் அதிபர் திரு. மு. இராமலிங்கமும், கௌரவ விருந்தினர்களாக அரியாலைப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. பா. மாலி, யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. க. கனகராஜா ஆகியோரும் கலந்து கொள்வர்.

மாலை 4 மணிக்கு நடைபெறும் கிரிக்கெட் இறுதியாட்டத்தில் நெப்டியூன் அணியை எதிர்த்து மஞ்சவனப்பதி அணி மோதும்.

மாலை 6 30 மணிக்கு மின்னொளியில் நடைபெறும் காட்சி கரப்பந்தாட்டப் போட்டியில் சென். அன்ரனீஸ் வி.க. பெண்கள் அணியை எதிர்த்து பாரதி வி. க. பெண்கள் அணி மோதும்.

இரவு 7.30 மணிக்கு மின்னொளியில் நடைபெறும் கரப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் ஆனைக்கோட்டை ம.வி. ச. அணியை எதிர்த்து காங்கேசன்துறை ஐ. வி. க. அணி மோதும்.

ஓ ஓ ஓ

யாழ்ப்பாணம், ஒக். 14

"பேபி" வெற்றிக் கேடயத்துக்காக திருநெல்வேலி வாலைஅம்மன் விளையாட்டுக் கழகம் நடத்தும் "செற்அப்" முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று காலை நிலைய முன்றலில் நடைபெறவுள்ள போட்டியில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:—

★ பிற்பகல் 3 30 மணி — சென். அன்ரனீஸ் வி. க. அணி எதிர் அரியாலை ஐக்கிய வி. க. அணி.

★ பிற்பகல் 4 30 மணி — ஐங்கரன் வி. க. அணி எதிர் நவோதயா வி. க. அணி. (க-5)

ஓ ஓ ஓ

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ் மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் 9 பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3. 30 மணிமுதல் நாவாந்துறை கலைவாணி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ பாஷையூர் சென் அன்ரனீஸ் சனசமூக நிலைய அணி எதிர் நாவாந்துறை கலைவாணி ச. ச. நி. அணி.

★ கொய்யாத்தோட்டம் கலைச்சுடர் ச. ச. நி. அணி எதிர் நாவாந்துறை கலைவாணி ச. ச. நி. அணி. (க-5)

ஓ ஓ ஓ

யாழ், மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு விழாவை ஒட்டி நடத்தப்படும் மேசைப் பந்துப் போட்டியில் யாழ் கோட்ட மாணவர்களுக்கான போட்டிகள் இன்று காலை 8 மணி முதல் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

## திறமை அடிப்படையில் அரசில் வேலை வாய்ப்பு

### அரசமைப்பில் திருத்தம் வரும்

போட்டிப் பரீட்சை மூலம் திறமை அடிப்படையில் அரச வேலைவாய்ப்பு வழங்குவதை உத்தரவாதம் செய்யக்கூடிய விதத்தில் அரசமைப்பு திருத்தப்படவிருக்கிறது.

இது தொடர்பாக காலி மாவட்ட ஐ. தே. கட்சி எம். பி. குருகுலரத்தினா சமர்ப்பித்த யோசனை, அரசமைப்பில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் பற்றி ஆராய நியமிக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சிக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த யோசனையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் ஆதரித்துள்ளார்.

அரசமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவது தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் இந்த யோசனையை அரசு முன்வைக்கும் என்று தெரிகிறது.

அரச வேலை வாய்ப்பு வழங்குவதில் அரசியல் தலையீடு - செல்வாக்கு இடம்பெறுவதை புதிய திருத்தம் தடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-எ)

## தென்மராட்சிப் பகுதியில் வெற்றிலை பயிரிட முயற்சி

யாழ்ப்பாணம், ஒக். 14

தென்மராட்சிப் பகுதியில் வெற்றிலைச் செய்கையை மேற்கொள்வதற்கு விவசாயத் திணைக்களத்தினர் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

முதற்கட்டமாக சாவகச்சேரி வேம்பிராய் பகுதியில் பரீட்சார்த்தமாக வெற்றிலைக் கொடிகள் நடப்பட்டுள்ளன.

இது வெற்றியளிக்கும் பட்சத்தில், தென்மராட்சியில் வெற்றிலைச் செய்கையை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கொழும்பு வெற்றிலையை எதிர்பார்க்காமல், குடாநாட்டில் வெற்றிலை செய்கையில் விவசாயிகளை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (ஓ-17)

**மரங்கள் வளர்வதனால் - மன உரமது வளர்கிறது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிமாபுரத்திலிருந்து

# 39 தமிழ்க் குடும்பங்களை வெளியேற்ற உத்தரவு!

யாழ்ப்பாணம், ஒக். 14

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ள சிறிமாபுரம் கிராமத்தில் குடியிருக்கும் 39 தமிழ்க் குடும்பங்களை அங்கிருந்து வெளியேறுமாறு அரச அதிகாரிகள் கடந்த ஞாயிறன்று உத்தரவிட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பகுதியில் சிங்களவர்களைக் குடியேற்ற வசதியாகவே தமிழ்க் குடும்பங்கள் வெளியேற்றப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# முன்னாள் தூதுவர் மீது திருட்டுக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 14

முன்னாள் ராஜதந்திரியான பத்ரபால விக்கிரமசிங்கா என்பவர் திருட்டுக் குற்றச்சாட்டு தொடர்பாக கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இலங்கைத் தூதராக சுவீடன் நாட்டில் இவர் முன்பு பணியாற்றியிருந்தார்.

14 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடியது தொடர்பாக கைது செய்யப்பட்ட இவரை கல்கிசை நீதவான் பிணையில் செல்ல அனுமதித்தார். (உ-எ)


## எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக் கல்லூரி அருகில்)

411/1, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

அனைத்து பாடங்களுக்குமான

O/L PAPER CLASS

எமது வழமையான ஆசிரியர் குழு

ஆரம்பம்

16 - 10 - 1993

சனிக்கிழமை

(சி/6232)


## ஆராதனை

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சுழிபுரம் வழக்கம்பரை அம்மன் கோயில் முன்றலில் மஹாளய அமாவாசையை ஒட்டி மஹாதேவ பிதிர்தேவ ஆராதனைகளும் திபங்கள் ஏற்றலும் நடைபெறவுள்ளன. (க-28)

## முன்னேறி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னும் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டிருக்குமானால், அது இராணுவத்துக்கு எதிர்காலத்தில் புதிதாக ஆட்களைத் திரட்டுவதற்கு வாய்ப்பளிப்பதாக இருந்திருக்கும்.

தற்போதைய நிலையில் இராணுவத்துக்கு ஆட்திரட்டுவது இலகுவான காரியமல்ல.

தற்சமயம் தமது பிடியில் வைத்து உள்ள பிரதேசங்களைத் தவிர புதிய பிரதேசங்களைக் கைப்பற்றி வைத்திருக்கப் போதுமான ஆட்பலமும் இராணுவத்திடம் இல்லை என்பதை யாழ்தேவி இராணுவ நடவடிக்கை எடுத்துக் காட்டியுள்ளது.

இந்த நிலையில் இராணுவத்தின் உடனடி நிலைப்பாடாக — குறைந்த பட்சம் — முன்னேறித் தாக்கிவிட்டு வாபஸாகும் இராணுவ நடவடிக்கைகளை மட்டுமே மேற்கொள்வது என்ற முடிவு அமைந்திருக்கிறது.

தந்திரோபாய மற்றும் கேந்திர லாபம் கருதி திட்டமிடப்படாத — "யாழ்தேவி" நடவடிக்கை போன்ற — இராணுவ நடவடிக்கைகள் தற்காலிக செயல்பாடாகவே இருக்கும் என்றும் —

மொத்தமாகப் பார்க்கையில் இத்தகைய இராணுவ நடவடிக்கைகள் அர்த்தமற்றதாகி விடுகின்றன என்றும் —

பாதுகாப்பு நிபுணர்கள் கருதுகின்றனர்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## வடமேல் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனமே திரு. ஜி. எம். பிரேமச்சந்திரா எதுவித நிபந்தனையும் விதிக்கப்படாத நிலையில் மேஜர் மொண்டேகு ஜய விக்கிரமாவினைக் முதலமைச்சராகப் பதவி பிரமாணம் செய்து வைக்கப்பட்டதும் தெரிந்ததே.

ஆனால் தென்மாகாண சபை ஆளுநராக அல்ஹாஜ் பாக்கிர் மார்க்கார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமரசிறி தொடங்கொடவை உடனடியாக முதலமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைக்க மறுத்திருந்தார்.

தீர்மானங்களின் பின்னர் நான்கு தினங்கள் இழுத்தடித்தே இந்த பதவிப் பிரமாண வைபவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பதவிப் பிரமாணம் செய்து வைப்பதில் மேஜர் மொண்டேகு ஜய விக்கிரம அவசரப்பட்டுச் செயலாற்றியது ஐ. தே. கவுக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்தே நேற்று மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரமவின் ராஜினாமாச் செய்தி வெளிவந்துள்ளது. (இ-எ-162-6)

## மண்ணெண்ணெய்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரிசோதகர் திரு வி கிருஷ்ணதாசன் ஆகியோர் தலைமையில் சென்ற குழுவே திடீர் பரிசோதனைகளை நடத்தியது.

இவ்வாறான திடீர் பரிசோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தவறிழைத்த ப. நோ. கூ. ச. கிளைகளின் முகாமையாளர்கள், விற்பனையாளர்கள் மீது உடனடி ஒழுங்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது முகாமையாளர் [illegible] — பிரதி உள்ளூராட்சி ஆணையாளருமான திரு த. வைத்திலிங்கம் உத்தரவிட்டுள்ளார்.

## அபூர்வ குழந்தை!

ஓர் உடலில் இரண்டு தலைகளுடைய ஆண் குழந்தை ஒன்று தென் ஆபிரிக்காவின் கேப்டவுனில் பிறந்துள்ளது என கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஆறு மாதமாகிய அன்றாடேவிற் கிராப்வ் என்ற இக் குழந்தையின் ஒரு தலை மத்தியகால (15 ஆம் நூற்றாண்டு) ஆங்கிலத்தையும், இன்னொரு தலை பண்டைய இலத்தீனையும் சரளமாகப் பேசுவதாக அறியப்படுகிறது.

ரோமனியக் கலாசாரத்தில் முதுமாணிப் பட்டம் பெற்ற கலாநிதி டாக்டர் கிரொசன் டன் இக் குழந்தையுடன் அரைமணி நேரம் லத்தீன் மொழியில் உரையாடி விட்டு குழந்தையின் உரையாடல் கல்வி மானுக்குரிய சொற்றொடர்களைக் கொண்டிருந்ததாகத் தெரிவித்தார். ஆங்கிலக் கலாநிதி ஒருவரும் இக் குழந்தையுடன் உரையாடினார் என்று தெரிவிக்கப்பட்டது.

குழந்தைக்கு எவ்வாறு இந்த அறிவு முதிர்ச்சி ஏற்பட்டது என்று நிபுணர்கள் தெளிவாகக் கூற முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (உ-ஒ-க)

## சந்திரிக்காவின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதேசமயம் சந்திரிக்காவுக்கு சாதகமாக நடந்து கொண்டது மூலம் அனுராவின் அரசியல் வாழ்வுக்கு அழிவினை ஏற்படுத்தி விட்டதாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மீது அனுராவின் ஆதரவாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்

அனுரா கட்சியில் இருந்து வெளியேறி விட்டதால் தலைமைப் பதவியை அடைவதில் சந்திரிக்கா எதிர் நோக்கிய தடைகள் அகன்றுவிட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மீனவர் காயம்

நேற்றிரவு 8. 25 மணியளவில் யாழ். பண்ணை கடற் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது கல்லைப்பிட்டியில் இருந்து படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மீனவர் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவத்தில் ஆனைக்கோட்டை சாக்கைநிலைச் சேர்ந்த இரத்தினசிங்கம் சிறி (வயது 22) என்பவரே காயமடைந்தவராவர் இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

## இந்தியத்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஹமீத், அது தொடர்பான அறிக்கையைத் தாம் எதிர்பார்த்திருப்பதாக இச்சந்திப்பின்போது தெரிவித்தார்.

இலங்கைக் கடற்படையினர் இனிமேல் இந்திய மீனவர்களைச் சுடமாட்டார்கள் என்று கூறிய அமைச்சர் —

இரு நாடுகளுக்கும் இடையே நல்லுறவைப் பேணுவதற்கு இப்படியான சம்பவங்களை எதிர் காலத்தில் தவிர்த்துக் கொள்ள இருதரப்பினரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் — என்றும் தெரிவித்தார்.

இதற்கு முன்னதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தியத் தூதர் திரு நரேஷ்வர் தயாள் இலங்கை வெளியுறவுச் செயலாளர் திரு பேர்னார்ட் திலகரத்தினாவை கொழும்பில் சந்தித்து தமது முறைப்பாட்டைத் தெரிவித்திருந்தார்.

சுட்டுக் கொல்லப்பட்ட நான்கு இந்திய மீனவர்களுக்கும் இலங்கை அரசு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றும் —

சம்பவம் குறித்து இலங்கை அரசு விசாரணை நடத்த வேண்டும் என்றும் — அவர் கேட்டிருந்தார்.

இதனை அடுத்தே அமைச்சர் ஹமீத் தலைமையிலான குழுவினர் நேற்று இந்தியத் தூதுவரைச் சந்தித்தனர்.


## எமது நேற்றைய வெளியீடு

பாண்டியராஜன், ஐஸ்வர்யா நடித்த

★ பொறந்தாலும் ஆம்பளையா பொறக்கக் கூடாது

★ நான் தான் ராணி

★ நான் தான் கீதா

★ ரெளடி பிரதர்ஸ்

★ பப்ளிக் ரெளடி

(ஒரிஜினல்)

சுப்பலோ வீடியோ ஓடியோ சென்ரர்

198/5 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/6230)


# மரண அறிவித்தல்கள்

## தர்மரட்ணம் அரவிந்தநாதன்

மணற்தறை லேன், கந்தர்மடத்தை வதிப்பிடமாகக் கொண்ட க. அரவிந்தநாதன் 13 - 10 - 93இல் காலமானார். இவர் மணற்தறை காலஞ்சென்ற தர்மரட்ணம் - சாமிஅம்மாவின் அன்பு மகனும், தவயோக சாந்தினி, ஜீவசாந்தினி, சிவகுமார், அசோகன், விக்கிரமன், விஜயன், கலா, சுரேஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நித்தியானந்தன், பத்மநாதன், ஜெனி ஆகியோரின் மைத்துனரும், தையல்நாயகி, பரமேஸ்வரம், காலஞ்சென்ற நவரத்தினம், தங்கம்மா ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14 10-93) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

திருமதி க. தர்மரட்ணம் (சாமியம்மா)

23/5, மணற்தறை லேன்,
கந்தர்மடம். (27637)

## திருமதி பத்மராணி அழகசுந்தரம்

(சங்கானை)

மலேசியாவை பிறப்பிடமாகக் கொண்டவரும், சங்கானையில் வசித்தவருமான திருமதி பத்மராணி அழகசுந்தரம் லண்டனில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அழகசுந்தரத்தின் அன்பு மனைவியும், இன்பரதி (ஜேர்மனி), சிறிதயாளன் (லண்டன்), சிறீதரன் (லண்டன்), இன்பவதனி ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகரத்தினம், மணி, சயந்தி, S K. கேபிள்ளை Sumitomo கொழும்பு, ஆகியோரின் மாமியாரும், சேதீஸ், மயூரன், அனித்தா, நிரோஷன், தனுஷன், கிவேதா, சஜானன், சிவனுஜா ஆகியோரின் பேத்தியும், காலஞ்சென்ற விமலராணி, விமலேந்திரன் (Vims), நிருமராணி, விம்பராணி, ரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த செவ்வாய் (12-10 1993) லண்டனில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

திருமதி நிருபா அருணாசலம்

இல 1, முதலியார் ஒழுங்கை,
நாவலர் வீதி, கண்டிக்குளி. (27647)


## எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக்கல்லூரி அருகில்)

411/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

O/L கணிதம்

PAPER CLASS

| | | | | |
|---|---|---|---|---|
| பிரிவு 1 | சனி. ஞாயிறு | 6 – 7 | மணி | பகுதி 2 |
| பிரிவு 2 | " " | 7 – 8 | " | பகுதி 2 |
| பிரிவு 3 | " " | 10 – 11 | " | பகுதி 1 |
| பிரிவு 4 | " " | 4 – 5 | " | பகுதி 1 |
| பிரிவு 5 | செவ் வியா | 9 – 10 | " | பகுதி 1 |
| பிரிவு 6 | திங். வெள்ளி | 3 – 4 | " | பகுதி 2 |

ஆசிரியர்

திரு. B.P. பாஸ்கரன்

(கடந்த 18 வருட பகுதி I, பகுதி II வினாக்களின் அலகுரீதியான வினா, விடை வகுப்பு)

ஆரம்பம்: 16-10-1993 சனிக்கிழமை

(சி/6231)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14-10-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org